**16.09.2025**

**O.S.No.100/2014**

**வா.சா. : ஜோதி**

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1) வாதி சாந்தியினுடைய அண்ணன் வெங்கடேசனின் அத்தை மகள் என்றால் சரிதான். என்னை பைத்தூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். சாந்திக்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்தை என்னுடைய மகன் பெயரில் கிரயம் செய்து கொண்டு அங்கேயே குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி அனைத்து சொத்தையும் எனக்கு விற்றுவிட்டதால் வாதிக்கு வேறு எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். சாந்தி பெயரில் உள்ள சொத்து தற்போது என்னுடைய மகன் ராஜாராம் பெயரில் கிரயமாக உள்ளது.

2) சாந்தியும் பிரதிவாதியின் அப்பாவும் 1999 லேயே பாகப்பிரிவினை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு வெங்கடேசனின் மகன்கள் அவர் அப்பா விட்டு சென்ற சொத்தை 1,2 பிரதிவாதிகள் பாகம் செய்து சொண்டு அதில் கண்டபடி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 25.03.2010 ல் அந்த பாகப்பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1999 ல் எழுதிய பாகப்பத்திரத்தை நான் படித்து பார்த்ததில்லை. அந்த பாகப்பத்திரத்தில் இனிமேல் பாகம் பிரிக்கக்கூடிய பொதுச்சொத்து இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சாந்தியிடம் இருந்து கிரயம் வாங்கிய சொத்திற்கு வடக்கில் உள்ளது என்றால் பிரதிவாதியின் வீட்டுக்கு அருகில் உள்ளது. வழக்கு சொத்து 40 வருடங்களாக வெங்கடேஷ் மற்றும் மகன்கள் பட்டா வாங்கி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சாந்தி மற்றும் வெங்கடேஷ் பாகப்பிரிவினை எழுதும் போதும் பிரதிவாதிகள் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வெங்கடேஷ் அனுபவித்து வந்த விவரம் சாந்திக்கு தெரியும்.

3) 1999ல் எழுதிய பத்திரத்தில் சொத்து விடுபட்டது என்று மேற்படி பாகப்பத்திரத்தில் எழுதப்படவில்லை. தாவா சொத்தில் பாகம் கேட்பதற்கான உரிமையே சாந்திக்கு இல்லை என்றும் நஞ்சை நிலத்தில் அவருக்கு ஒதுக்கி கொடுத்தார்கள் என்றால் இல்லை. சாந்தி சொத்தை வெசங்கடேசன் குதவை வைத்துவிட்டார். அதை என் மகன் பணம் கொடுத்து மீட்டார். அவ்வாறு சொல்வது தவறு என்றும் அது சாந்திக்கு பாகமாக பிரிந்த சொத்து என்றும் அதை வெங்கடேசன் குதவைக்கு வைக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக சாந்தி சொத்தை வெங்கடேசன் குதவை வைத்துவிட்டார் என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) சாந்தி அழைத்ததின் பேரில் தான் சாட்சியம் சொல்ல வந்தேன். சாந்தி கேட்டுக்கொண்டதறன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சாந்தி பாகம் கேட்பதற்கான உரிமை இல்லை என்றும் அது வெங்கடேசன் மற்றும் மகன்களுக்கு தான் சொந்தம் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2025.09.16 17:55:20 +0530

**Subordinate Judge, Attur.**